தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1975 நவம்பர் 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 226, 227, 228 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

கும்முடிப்பூண்டி வட்ட மருத்துவ மனை

* 229 **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி வட்டத் தலைநகரில் 'வட்ட அரசினர் மருத்துவ மனை' (*Taluk Headquarters Hospital*) அமைக்கும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கும்முடிப்பூண்டி வட்டத் தலை நகரில் 'வட்ட அரசினர் மருத்துவ மனை' அமைக்கும் செயற் குறிப்பு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்தத் துணை வட்டம் வட்டமாகி ஓராண்டு ஆகிவிட்டது. நாங்கள் வட்ட மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டியிருக்கும்போது, ஏறக் குறைய 25 மைல் தூரத்திலுள்ள பொன்னேரிக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, பிற்பட்ட சூழ்நிலையில் இருக்கும் இந்த வட்டத்திலுள்ள மக்களுக்கு உதவியாக இருக்கும்

பொருட்டு கும்முடிப்பூண்டி வட்டத் தலைநகரில் வட்ட அரசினர் **மருத்துவ** மனை அமைப்பதற்கு முன்னுரிமை தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 'முன்னுரிமை' என்ற சொல்லைப் பயன் படுத்தியதை வரவேற்கிறேன். இதற்கு முன்பே வட்டத் தலை நகரான இடங்கள் சில இருக்கின்றன. அந்த முன்னுரிமைப்படி எப்பொழுது நிதி கிடைக்கிறதோ அப்பொழுது கவனிக்கப் படும்.

வேடந்தாங்கல் மருத்துவ மனைக்கு மானியம்

* 230 **வினா—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் வேடந்தாங்கல் கிராமத்தில் Service International Organisation நடத்தும் மருத்துவ மனைக்கு மானியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

* 231 **வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம், தரங்கம்பாடி பகுதிக்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அப்பேரூராட்சி மன்றத்திலிருந்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.